செ.வெ.எண்.35 நாள்: 23.04.2020

# அரியலூர் மாவட்டம்
## அம்மா உணவகத்தில் பொதுமக்களுக்கு விலையில்லா உணவுகளை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் வழங்கினார்கள்.

அரியலூர் மாவட்டம், அரியலூர் பேருந்துநிலையத்திலுள்ள அம்மா உணவகத்தில் தனது சொந்த நிதியிலிருந்து பொதுமக்களுக்கு விலையில்லா உணவுகளை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் வழங்கி, துவக்கி வைத்தார்கள். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் **திரு.வீ.ஆர்.சீனிவாசன்** அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

இந்நிகழ்வில், மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் தனது சொந்த நிதியிலிருந்து அரியலூர் அம்மா உணவகத்தில் சுவையான உணவுகள் விலையில்லாமல் பொதுமக்களுக்கு வழங்கி துவக்கி வைத்தார்கள். மேலும், அரியலூர் மாவட்ட செய்தியாளர்களுக்கு பாதுகாப்பாக செய்திகள் சேகரிக்க முககவசங்கள், கையுறைகள், சோப்பு, கிருமி நாசினி போன்ற பாதுகாப்பு பொருட்களையும் வழங்கினார்கள்.

**இந்நிகழ்வில், மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் தெரிவித்ததாவது,**

கொரோனா வைரஸ் தொடர்பாக தடுப்பு நடவடிக்கைகள் தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மேலும், அரியலூர் மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

அரியலூர் மாவட்டத்திலுள்ள அம்மா உணவங்கள் மூலம் தரமான உணவுகள் மூன்று வேலையும் குறைந்த விலையில் வழங்கப்பட்டு வருகிறது. இன்று (23.04.2020) முதல் அரியலூர் பேருந்துநிலையம் மற்றும் அரசு தலைமை மருத்துவமனையில் செயல்பட்டு வரும் அம்மா உணவகங்களில் மூன்று வேலையும் தரமான உணவுகள் விலையில்லாமல் பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ளது.

பேருந்துநிலையத்திலுள்ள உணவகத்தில் தினந்தோறும் தூய்மைப்பணியாளர்கள் மற்றும் ஆதரவற்றவர்கள் என 196 நபர்களுக்கும், அரசு தலைமை மருத்துவமனையிலுள்ள அம்மா உணவகத்தில் நரிக்குறவர்கள், மருத்துவமனைப் பணியாளர்கள் என 210 நபர்களுக்கும் மேலும், அன்றாட வருகைப்புரியும் பொதுமக்களுக்கும் காலை இட்லி, மதியம் கலவை சாதம், இரவு இட்லி ஆகிய உணவுகள் மூன்று வேலையும் விலையில்லாமல் 144 தடை உத்தரவு முடியும் வரை வழங்கப்படும்.

கொரோனா வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த தமிழ்நாடு அரசு பல்வேறு தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கவும் உறுதுணையாக இருப்பதற்கு செய்தியாளர்களின் பங்கு முக்கியமானதாகும். எனவே, பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் முககவசம், கையுறை, கைகளை சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு சோப்பு, கிருமி நாசினி போன்ற பாதுகாப்பு பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. இப்பொருட்களை பத்திரிக்கையாளர்கள் பயன்படுத்தி, நோய் தொற்று அனுகாதவாறு சமூக இடைவெளியினை பயன்படுத்தி பாதுகாத்துக்கொள்ள வேண்டும். செய்தியாளர்களாகிய உங்களின் பணி அனைவருக்கும் முக்கியமானதாகும் என மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

முன்னதாக, அம்மா உணவகத்தில் பணிபுரியும் 12 பணியாளர்களுக்கு நகராட்சியின் மூலம் விலையில்லா சேலைகளை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் வழங்கினார்கள்.

இந்நிகழ்வில், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் பொ.சந்திரசேகர், கோட்டாட்சியர் ஜெ.பாலாஜி, நகராட்சி ஆணையர் குமரன், வட்டாட்சியர் சந்திரசேகரன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**